**ஜூன் – 14**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் நடந்து முடிந்த அரேபிய-இந்திய ஆற்றல் மன்றத்தில் ஆற்றல் ஒத்துழைப்பு மற்றும் பிராந்தியங்களுக்கிடையேயான ஆற்றல் வர்த்தகம் போன்றவற்றை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.
  - இந்த நிகழ்வானது மொரோக்கோ ராஜ்ஜியம் மற்றும் இந்தியா ஆகியவற்றின் இணைத் தலைமையின் கீழ் காணொலி மூலம் நடைபெற்றது.
- ஜுன் 10 அன்று வருடாந்திர வளைய சூரிய கிரகணம் உலகின் பல பகுதிகளில் தென்பட்டது.
  - நிலவினைச் சுற்றி நெருப்பு வளையம் போன்று உருவான இந்த சூரிய கிரகணமானது மிக அரிதானதாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் பொறுப்பை ஏற்க உள்ள மாலத்தீவின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா சாஹீத் அவர்கள் இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான K. நாகராஜ் நாயுடு அவர்களை செஃப் தே கேபினட் (chef de cabinet) அல்லது தனிச் செயலர் என்ற ஒரு பொறுப்பிற்கு நியமித்துள்ளார்.
  - இவருடைய பதவிக் காலம் ஒரு வருடமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- சமீபத்திய அரசு உத்தரவின்படி, லடாக் ஒன்றியப் பிரதேசத்தின் வேலைவாய்ப்புகள் அனைத்தும் லடாக்கின் மக்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.
  - அதன் துணை நிலை ஆளுநர் R.K. மாத்தூர் அவர்கள் இந்த உத்தரவினை அறிவித்தார்.
- இந்தியன் ஆயில் நிறுவனத்தின் குஜராத் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமானது தூய எரிபொருள் முன்னெடுப்பின் ஒரு அம்சமாக இந்தியாவின் முதலாவது ஹைட்ரஜன் வழங்கீட்டு (விநியோக) வசதியை அமல்படுத்த உள்ளது.
  - இந்த வசதியானது வடோதரா மற்றும் கேவடியா/ சபர்மதி ஆசிரமம் ஆகியவற்றுக்கு இடையே இயங்கும் ஹைட்ரஜன் பேருந்துகளுக்கு எரிபொருள் வழங்கும் நோக்கில் தொடங்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பசுமை விமான நிலையங்கள் அங்கீகாரம்

- GMR ஏர்போர்ட்ஸ் நிறுவனத்தினால் இயக்கப்படும் டெல்லி மற்றும் ஹைதராபாத் விமான நிலையங்களுக்கு சர்வதேச விமான நிலையங்கள் மன்றத்தினுடைய (Airports Council International – ACI) 2021 ஆம் ஆண்டிற்கான பசுமை விமான நிலையங்கள் எனும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விமான நிலையங்கள் மேற்கொண்ட நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த முன்னெடுப்புகளுக்காக இந்த அங்கீகாரமானது வழங்கப்பட்டுள்ளது.
- டெல்லி சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு ‘ஆண்டுக்கு 25 பில்லியன் பயணிகளுக்கு மேல் எனும்’ பிரிவில் பிளாட்டின அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- ஹைதராபாத் சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு ‘ஆண்டுக்கு 25 மில்லியன் பயணிகளுக்கு கீழ்’ எனும் பிரிவில் தங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் நோக்கம்,

- வான்வழிப் போக்குவரத்தினால் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக வேண்டி சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறப்பான நடைமுறைகளை மேம்படுத்துவது,
- சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களில் சிறப்பாக செயலாற்றிய விமான நிலையப் பணியாளர்களுக்கு அங்கீகாரம் அளிப்பது போன்றவையாகும்.

❖ ACI அமைப்பின் 2021 ஆம் ஆண்டு பசுமை விமான நிலையங்கள் அங்கீகாரத் திட்டத்தின் கருத்துரு, ‘காற்றுத் தர மேலாண்மை’ (Air Quality Management) என்பதாகும்.




## உயர்கல்வி குறித்த அனைத்திந்தியக் கணக்கெடுப்பு

❖ கல்வி அமைச்சகமானது 2019-2020 ஆம் ஆண்டிற்கான “உயர்கல்வி குறித்த அனைத்திந்தியக் கணக்கெடுப்பு” என்ற ஆய்வு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

❖ 2015 ஆம் ஆண்டில் 75 ஆக இருந்த தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் 135 ஆக உயர்ந்துள்ளது என இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

❖ 2015-16 ஆம் ஆண்டு முதல் 2019-20 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மாணாக்கர் சேர்க்கையானது 11.4 சதவீதம் உயர்ந்துள்ளது.

❖ இதே காலகட்டத்தில் மாணவிகளின் சேர்க்கை வீதமானது 18.2 சதவீதம் உயர்ந்து உள்ளது.

❖ 2019-20 ஆம் ஆண்டில் உயர்கல்வியின் மொத்த சேர்க்கையானது 3.85 கோடியாகும் (3.04% உயர்ந்துள்ளது).

❖ இது 2018-19 ஆம் ஆண்டில் 3.74 கோடியாகவும் 2014-15 ஆம் ஆண்டில் 3.42 கோடியாகவும் இருந்தது.


❖ பாலின சமத்துவக் குறியீடும் 1.01 என்ற அளவில் மேம்பட்டுள்ளது.

❖ 2015 ஆம் ஆண்டு முதல் முனைவர் பட்டதாரி படிப்புகளுக்கான சேர்க்கையின் எண்ணிக்கையும் 60% உயர்ந்துள்ளது.

### *தமிழ்நாடு*

❖ 51.4 சதவீத மொத்த மாணவர் சேர்க்கையுடன் தமிழ்நாடானது தேசிய சராசரியை விட இருமடங்கு அதிகளவில் மாணவர் சேர்க்கை உயர்வினைக் கண்டுள்ளது.

- தமிழகத்தின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது, 2030 ஆம் ஆண்டுக்குள் 50% மொத்த மாணவர் சேர்க்கையை எட்ட வேண்டும் என்ற தேசிய கல்விக் கொள்கையின் இலக்கையும் விஞ்சியுள்ளது.
- 2010-11 ஆம் ஆண்டில் 32.9% ஆக இருந்த மாநிலத்தின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதமானது 2019-20 ஆம் ஆண்டில் 51.4% ஆக உயர்ந்துள்ளது.




## இந்தியாவில் முதன்முறையாக மின்னழுத்த மூலமாற்றி அடிப்படையிலான HVDC அமைப்பு

- இந்திய மின்சார அமைப்புக் கழகமானது (Power Grid Corporation of India Ltd – PGCIL) இந்தியாவிலேயே முதல்முறையாக மின்னழுத்த நேர்மின்னோட்ட (High Voltage Direct Current – HVDC) மின்சாரப் பரப்புகை அமைப்பின் முழுமையான செயல்பாட்டைத் தொடங்கி வைத்துள்ளது.
- இது நாட்டின் தென்பகுதியினுடைய ஆற்றல் அமைப்பினை வலுப்படுத்தும்.
- PGCIL நிறுவனமானது 320 KV, 2000 MW திறன் உடைய புகளூர் (தமிழ்நாடு) – திருச்சூர் (கேரளா) ஆகியவற்றுக்கு இடையேயான மின்னழுத்த மூல மாற்றி என்ற அடிப்படையில் அமைந்த உயர் மின்னழுத்த நேர்மின்னோட்ட அமைப்பின் மோனோ போல் – I (Monopole-I) அல்லது ஒற்றைத் துருவம் என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்கான அவசர நடவடிக்கை

- 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை ஒழிப்பதற்காக வேண்டி ஒரு அவசர நடவடிக்கைக்கான பிரகடனத்திற்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கோவிட் – 19 பெருந்தொற்றானது ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்துள்ளதாகவும் எய்ட்ஸ் நோய்க்கான மருந்துகள், சிகிச்சைகள் மற்றும் நோய்க் கண்டறிதல் போன்றவற்றினை அணுகுவதற்கான வாய்ப்புகளை தடம் மாற்றியுள்ளதாகவும் இது குறிப்பிட்டுள்ளது.
- வருடாந்திர புதிய எய்ட்ஸ் (HIV) தொற்றுக்கான எண்ணிக்கையை 3,70,000க்கும் கீழ்

குறைக்குமாறு உறுப்பினர் நாடுகளுக்கு ஐ.நா. பொதுச் சபையானது அறிவுறுத்தி உள்ளது.

- மேலும் 2025 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் தொடர்பான வருடாந்திர இறப்பு எண்ணிக்கையை 2,50,000க்கும் கீழ் குறைக்குமாறும் வேண்டி இது வலியுறுத்தி உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நிகர சுழியம் கார்பன் உமிழ்வு – இந்திய இரயில்வே

- இந்திய ரயில்வேயானது 2030 ஆம் ஆண்டுக்கு முன் நிகர சுழியம் என்ற கார்பன் உமிழ்வு நிலையை அடைதல் (net-zero carbon emission) என்பதை நோக்கிச் செயலாற்றி வருகிறது.
- Head on Generation எனும் மின்சார வழங்கீட்டு அமைப்பு, உயிரிக் கழிப்பறைகள், LED பல்புகள் மற்றும் தானியங்கி இரயில்பெட்டி சுத்திகரிப்பு மையங்கள் போன்ற பல நவீன முறைகளை இந்திய இரயில்வே செயல்படுத்தி வருகின்றது.
- தற்போது இந்திய ரயில்வேயானது நீண்டகால மற்றும் குறைவான கார்பன் செயல்பாடு எனும் நோக்குடன் கூடிய ஒரு குறைகார்பன் பசுமைப் போக்குவரத்து பிணையம் (low carbon green transportation network) மாதிரியான ஒரு பிரத்தியேக சரக்கு வழித்தடங்களை (கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய பிரத்தியேக சரக்கு வழித்தடம்) உருவாக்கி வருகிறது.
- மேலும் இது நிலையான மேம்பாட்டு இலக்குகளைக் கருத்தில் கொண்டு கட்டமைக்கப்பட்ட இரயில் நிலையங்களுக்கு பசுமைச் சான்றிதழையும் வழங்கிடச் செய்கிறது.

# மாநிலச் செய்திகள்

## மின்னணு அடையாள அட்டைகள்


- பஞ்சாப் அரசானது தனது அதிகாரிகள்/ஊழியர்களுக்கு மின்னணு அடையாள அட்டைகளை (eIDs) வழங்கத் தொடங்கியுள்ளது.
- மின்னணு அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் முதல் மாநிலம் இதுவேயாகும்.
- இவற்றுள் தொடர்பற்ற அருகாமைத் தகவல் தொடர்பு தொழில்நுட்பமானது (Near Field Communication – NFC) பொருத்தப் பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வீரேந்திர நானாவதி

- சர்வதேச நீச்சல் போட்டிக் கூட்டமைப்பினுடைய (International Swimming Federation – FINA) வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் இவரே ஆவார்.
- இவர் 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவர் தற்போது இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவராகவும் இந்திய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.

- இவர் இந்திய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஆவார்.
- மேலும் இவர் FINA தொழில்நுட்ப நீச்சல் போட்டிக் குழுவின் செயலாளரும் ஆவார்.
- இவர் ஆசிய நீச்சல் போட்டிக் கூட்டமைப்பின் மூத்த துணைத் தலைவரும் ஆவார்.



## 2021 ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்ஜிய ஆசியத் திரைப்பட விழா

- 2021 ஆம் ஆண்டு ஐக்கிய ராஜ்ஜிய ஆசியத் திரைப்பட விழாவில் (UK Asian Film Festival - UKAFF) இந்திய நடிகை திலோத்தமா சோமே என்பவருக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப் பட்டுள்ளது.
- 'Raahgir : The Wayfarers' எனும் திரைப்படத்தில் அவருடைய சிறந்த நடிப்பிற்காக வேண்டி அவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் கௌதம் கோசே என்பவராவார்.
- 2021 ஆம் ஆண்டு UKAFF விழாவானது அதன் 23வது வருடாந்திர நிகழ்வாகும்.
- இதில் திரைப்பட இயக்குநர் கௌதம் கோசே அவர்களுக்கு சிறந்த இயக்குநருக்கான விருதானது வழங்கப்பட்டது.

## ஆசிய பசிபிக் உற்பத்தித்திறன் சாம்பியன் விருது

- குஜராத் கூட்டுறவுப் பால்பொருள் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் (அமுல்) மேலாண்மை இயக்குநரான R.S. சோதி அவர்களுக்கு ஆசிய பசிபிக் உற்பத்தித்திறன் சாம்பியன் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது டோக்கியோவின் ஆசிய உற்பத்தித் திறன் அமைப்பினால் வழங்கப் பட்டது.
- மேம்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் திறன்மிகு பால் விநியோகம் போன்றவற்றை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- கடந்த 20 ஆண்டுகளில் இந்த மதிப்புமிக்க விருதைப் பெற்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச லெவல் கிராசிங் பற்றிய விழிப்புணர்வு தினம் – ஜுன் 10

- சர்வதேச இரயில்வே ஒன்றிய அமைப்பினால் இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு சர்வதேச லெவல் கிராசிங் (இரயில்பாதை – சாலை சந்திப்பு) பற்றிய விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு, 'கவனச் சிதறல்' (distraction) என்பதாகும்.
- இதன் முழக்கம் "கவனச் சிதறல் உயிரைப் பறிக்கும்" (Distraction kills) என்பதாகும்.
- இந்தியாவின் தெற்கு – மத்திய ரயில்வேயானது லெவல் கிராசிங் உள்ள பகுதிகளில் பொது மக்களுக்காக சில விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நிகழ்த்தி இத்தினத்தினைக் கடைபிடித்தது.
- தெற்கு மத்திய இரயில்வே மண்டலமானது இந்திய இரயில்வே அமைப்பின் 18 மண்டலங்களுள் ஒன்றாகும்.
- தெலுங்கானா, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் இரயில்சேவைகள் தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் வரம்பிற்கு உட்பட்டவையாகும்.
- தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் தற்போதைய தலைமையகம் செகந்திராபாத் இரயில்வே நிலையமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★